
# தோரணம் Thoranam

நன்றே செய்! இன்றே செய்!!

| | | |
|---|---|---|
| SMS(UK)Today | மாத e – செய்தி ஏடு | Monthly e-Newslett |
| ஓலை –2 | மாசி 2017 | இதழ்-13 |


## 40ல் திருமணங்கள் 40




**40 th Anniversary gift for 40 young couples**




**40ல் திருமணங்கள் 40 திட்டத்தின் விபரங்களுக்கு**

**பக்கங்கள் 8-10 பார்க்கவும்**



ஆசிரியர் - வை.சிவனருட்செல்வர் வடிவமைப்பு - சோ.நிரஞ்சன்

# கங்கை கொண்ட சோழபுரம் - குடமுழுக்கு விழா

**தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டுவித்த இராசராசசோழனின் மகனான இராசேந்திர சோழமன்னனால் கட்டப்பட்ட கங்கை கொண்ட சோழபுரக் கோயிலின் குடமுழுக்கு விழா 02-02-2017 அன்று நடைபெற்றது.**





## சங்க, ஆலய மாசி-பங்குனி-சித்திரை மாத நிகழ்வுகள் - 2017

**09-02-2017** வியாழன் தைப்பூசம் (Thaippoosam)

**24-02-2017** வெள்ளி சிவராத்திரி (Sivaraththiri)

**11-03-2017** சனி நடேசர் அபிசேகம் மாலை 6.00 மணிக்கு (Nadesar Abishekam) 6.00pm

**06-04-2017** வியாழன் யோகர்சுவாமி குருபூசை

**12-04-2017** புதன் காரைக்காலம்மையார் குருபூசை

**14-04-2017** வெள்ளி ஏவிளம்பி புத்தாண்டுப்பிறப்பு

**20-04-2017** வியாழன் நடேசர் அபிசேகம் மாலை 6.00 மணிக்கு

**22-04-2017** சனீ நாவுக்கரசர் குருபூசை

**உயிர்களுக்கு நான்கு வகைத் தோற்றங்களும் எழுவகைப்பிறப்பும் உண்டு.** என நூல்களில் கூறப்படுகின்றன. முட்டையிற் பிறப்பன, வேர்வையிற் பிறப்பன, வித்திற் பிறப்பன, கருவிற் பிறப்பன. ஏன்பன நால்வகைத் தோற்றம். இவை அண்டசம். சுவேதசம். உற்பிச்சம். சராயுசம் எனப்படும். தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர் என்பன எழு ஏழு பிறப்பாம். எல்லா உயிர்ப் பொருளும் இரு வகைப்படும். அசையாப்பொருள் (தாவரப் பொருள்) அசையும் பொருள் (சங்கமப் பொருள்). தாவர வகையுள் கல், புல், பூடு, மரம் என்ற நான்கும், அசையும் பொருளில் புழு, பாம்பு, பறவை, பல்மிருகம், மனிதர், அசுரர், முனிவர், பேய், கணங்கள், தேவர் என பத்தும் உண்டு. தாவரப் பொருளாயிருந்து அறிவு வளர்ச்சிக்கேற்ப அசையுாப் பொருள்கள் அசையும் பொருள்களில் தேவர் ஈறாக உயர்ந்த பிறவி எடுக்கிறது. (திருவாசகம்)



# தைப் பொங்கல்

## நிகழ்வுகள் ~ 2017

### சங்க ஆலயத்தில்

### 14~01~2017











## "கரங்குவிவார்", "சிரங்குவிவார்"

இறைவன் விரும்பியிருக்கும் இடங்கள் இரண்டு 1– நெஞ்சத்தாமரை; 2– துவாதசாந்தப் பெருவெளி; அஃதாவது தலைக்குப் பன்னிரண்டு அங்குலங்களுக்கு மேலுள்ள இடம். இவ்விரண்டு இடங்களிலும் இறைவனை நினைத்து வழிபடவேண்டும் என்பதை திருவாதவூரடிகள் தனது நமசிவாயப்பதிகத்தில் "கரங்குவிவார் சிரங்குவிவார்" என்று குறிப்பிடுகிறார்.

## "சிவ சிவ என்றிட சிவகதிதானே"










## ‘கலசம்’ ஆன்மிக காலாண்டிதழ் வெளியீடு

‘கலசம்’ 84வது காலாண்டிதழ் சென்ற தைப்பொங்கல் தினமான 14-01-2017 அன்று சங்க ஆலயத்தில் வெளியிடப்பட்டது. முதற்பிரதியை திருமதி சொர்ணமலர் முருகையா அவர்கள் பெற்றுக்கொள்வதையும் அடுத்த படத்தில் ‘கலசம்’ ஆசிரியர் திரு.க.ஜெகதீஸ்வரன்பிள்ளை அவர்கள் உரையாற்றுவதையும் காண்கிறீர்கள்.

**கலசம் அடுத்த இதழ்** ⟹ *சித்திரை வருடப்பிறப்பன்று*

"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளரப்போம்"

## 40ல் திருமணங்கள் 40

எமது சங்கம் தனது 40வது வருடத்தையொட்டி தனது 40ல் 40 என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். அதன் விபரங்களை சங்கத்தின் வெளிநாட்டுப்பிரிவின் செயலாளர் திரு.வி.சி.வாமனானந்தன் அவரகள் தைப்பொங்கல் தினத்தன்று ஆலயத்திற்கு வருகை தந்திருந்தவர்களுக்கு அதனைப் பற்றிய விளக்கங்கள் தருவதை காண்கிறீர்கள்.

(இதனைப் பற்றிய முழுவிபரங்களையும் 1,8,9.10ம் பக்கங்களில் காணலாம்.)



**யாழ். தென்மராட்சி தெற்கிலுள்ள கிராம பாடசாலைகளில் சிலவற்றில் பயிலும் 41, 6ம் வகுப்பு மாணவர்களுக்கு தேவையான சில புத்தகங்கள் இலண்டனில் உள்ள சைவமுன்னேற்றச் சங்கத்தின் உதவியுடன் மிருசுவில் நேயம் சமூக நிலையத்தின் ஊடாக சென்ற 14-01-2017 தைப்பொங்கல் தினத்தன்று வழங்கப்பட்டது.**

**இதற்கு சைவ.மு.சங்கத்தின் சார்பில் நிதியுதவி வழங்கப் பட்டது.**

**ரூபா 65,000/**


நேயம் சமூக நிலையம், மிருசுவில் தெற்கு

பொங்கல் விழா 2017


இடம் :- நிலைய முன்றல்

காலம் :- 15.01.2017 ஞாயிறு ந.ப 12.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மிருசுவில் தெற்கு,
மிருசுவில்.

நிர்வாகத்தினர்
நேயம் சமூக நிலையம்,


நிகழ்வுகள்

* 2016 ஆண்டு மிருசுவில் கிராமத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு.

* 2016 ஆண்டு அண்மைய பாடசாலைகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு. அனுசரணை:- இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கம்

* Claretian Missionary நடாத்திய அகில இலங்கை ரீதியிலான குறும்படப் போட்டியில் 4ம் இடம் பெற்ற "சிதையும் மொட்டுக்கள்" குறும்படத்தை இயக்கிய,நடித்த மிருசுவிலின் வளர்ந்து வரும் கலைஞர்களுக்கான கௌரவிப்பு.

* கலை நிகழ்வுகள்

*சிறந்த கணவன் ,மனைவி தெரிவு

*விளையாட்டுக்கள்

-பெண்களுக்கான தேங்காய் துருவுதல்

-பெண்களுக்கான கிடுகு பின்னுதல்

-சமநிலை ஓட்டம்

-முட்டி உடைத்தல்

-பணிஸ் உண்ணுதல்

-தேங்காய் உடைத்தல்

பலூன் உடைத்தல்

கயிறிழுத்தல்

ஒவ்வொரு போட்டியும் ஆண்,பெண், சிறுவர்,பெரியோர் என நான்கு பிரிவுகளாக இடம்பெறும்.

























அகில இலங்கை ரீதியில் 2016ம் ஆண்டு நடைபெற்ற குறும்படப் போட்டியில் பங்குபற்றி நடித்து, 4ம் இடத்தைப் பெற்று அதில் நடித்தவரகள். கௌரவிக்கப்பட்டார்கள்

# ஏகாதச ருத்ர பாராயணம் – 29 – 01 – 2017



எமது ஆலயத்தில் தொடர்ச்சியாக ஒன்பதாவது ஆண்டாக இவ் வருடமும் ஏகாதச ருத்ர பாரராயணமும் ஹோமமும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் ஏராளமானோர் இறையருள் நிகழ்வில் கலந்து கொண்டார்கள். பாரயணத்தின் சில பகுதிகளை கீழேயுள்ள U-tube ஐ அழுத்துவதன்மூலம் கேட்கலாம்

**ஓம் நமசிவாய சிவாயநம ஓம்**













முதலாம் பக்கத் தொடர்ச்சி



சைவ முன்னேற்றச் சங்கத்தின் திருமணத் திட்டம்

அன்புடையீர் வணக்கம். எங்களின் 25ம் ஆண்டு நிறைவை 25 இளம் பெண்கள் ஒவ்வொருவருக்கும் 5 பவுன் பொன் நகைகள் கொடுத்தும், கண்பார்வை இல்லாத 25 பேருக்கு டீசயடைடந கருவிகள் கொடுத்தும் சிறப்பித்தோம்.

நாம் எமது சேவையில் நாற்பது ஆண்டுகளை எ ட ் டி யு ள ் ே ள ா ம ் . இறையருளாலும் உங்கள் ஆதரவாலும் தொடரும் எங்கள் பணிகள் மேலும சிறக்க நீங்கள் துணையிருக்க வேண்டுமென பணிவாகக் கேட்கிறோம்.

இந்த வளர்ச்சி எங்களை எமது பணிகளின் எல்லாத் துறைகளிலும் மேலும் ஆர்வத்துடன் ஈடுபட ஓர் உந்து சக்தியாகவும் அமைகின்றது. நாற்பது ஆண்டுகளின் நிறைவை பல வழிகளிலும் சிறப்பிக்க எண்ணியுள்ளோம். இதன் ஓர் அங்கமாக இலங்கையில் திருமண வயதை அடைந்தும் வறுமையின் காரணமாக மண வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாமல சிரமப்படும் நாற்பது மணமக்களுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பும் ஒரு பாரியத் திட்டத்தை நாம் மேற்கொள்கிறோம். இந்த மனிதநேயப் பணியில் நீங்கள் இணைந்து நாற்பது திருமணங்களை நடத்தி அவர்களின் குடும்ப வாழ்வு மலர கைகொடுக்க வாருங்களென அன்புடன அழைக்கின்றோம்.

# Sacred gifts serve a divine purpose

The Sangam has achieved 40 years of service to the community since its inauguration in 1977. By the grace of God and the support of our well-wishers, the Sangam has grown over the years and has undertaken numerous endeavours to help people, and reaching this significant milestone spurs us on to achieve even greater heights in community service.

To commemorate the 40th anniversary of the Sangam, various charitable ventures are being planned. One of our ventures is to organise the wedding ceremonies for 40 couples in Sri Lanka who have been affected by the war and, thus, are in an abysmal economic state.

The Sangam aims to fund the costs involved in organising a wedding, so that couples who are unable to proceed with wedded life due to financial constraints are able to do so.  We humbly request your support in this venture to achieve our goal of organising 40 wedding ceremonies, to give these couples a helpful start to their family lives.  Without the assistance of community- minded

100% of donations will go towards the ceremonies and none will be spent on administrative costs. Further information about  this project can be found on the Sangam's website. Please consider marking our 40th year anniversary with a gift for these young couples

in-



"If you want to celebrate a happy occasion, do it by helping those who are in need."

# நாற்பதைக் கொண்டாட நல்லதொரு வழி

## 1977 - 2017



**அன்புடையீர் வணக்கம். சங்கம் தனது நிறைவான சேவையில் நாற்பது ஆண்டுகளை எட்டியுள்ளது. இறையருளாலும் உங்கள் ஆதரவாலும் தொடரும் எங்கள் பணிகள் மேலும் சிறக்க நீங்கள் துணையிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.**

**இந்த வளர்ச்சி எங்களை எமது பணிகளின் எல்லாத் துறைகளிலும் மேலும் ஆர்வத்துடன் ஈடுபட ஓர் உந்து சக்தியாகவும் அமைகின்றது. நாற்பது ஆண்டுகளின் நிறைவை பல வழிகளிலும் சிறப்பிக்க எண்ணியுள்ளோம். இதன் ஓர் அங்கமாக இலங்கையில் வறுமையின் காரணமாகத் திருமண வயதை அடைந்தும் மண வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாமல் திண்டாடும் நாற்பது மணமக்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் பாரியத் திட்டத்தை நாம் மேற்கொள்கிறோம். இந்த மனிதநேயப்பணியில் நீங்கள் இணைந்து நாற்பது திருமணங்களை நடத்தி அவர்களின் குடும்ப வாழ்வை ஆரம்பித்து வைக்க நல்லதொரு துணைசெய்து கொடுக்க வாருங்களென அன்புடன் அழைக்கின்றோம்.**

### திருமணச் செலவு

| | |
|---|---|
| தாலி அரைப் பவுண் | ரூபா 25,000.00 |
| கூறைச் சேலை | ரூபா 10,000.00 |
| பட்டு வேட்டி சால்வை | ரூபா 5,000.00 |
| எழுத்து மோதிரங்கள் (2) | ரூபா 30,000.00 |
| திருமணச் செலவுக்கு | ரூபா 10,000.00 |
| வீட்டுப் பாவனைக் பொருட்களுக்கு | ரூபா 15,000.00 |
| மொத்தச் செலவு | ரூபா 95,000.00 |

## நாளைய கனவை நனவாக்கும் நாற்பது

## The best preparation for tomorrow is doing our best today

தொடர்பு: வாமன் 07958 142288 சேகர் 07872 144794 நிரஞ்சன் 07876 404354

Saiva Munnetta Sangam (UK) 0208 514 473

உ

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

**Saiva Munnetta Sangam (UK)**

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel: 020 8514 4732 **Registered Charity No: 292085**

**website: saivamunnettasangam.com email: smsukinfo@gmail.com**

# திருமண உதவித் திட்ட நிதி அன்பளிப்புப் பத்திரம்

# Wedding aid project donation form

*Thank you very much for considering a donation to our charity*

Full Name a.....................................................

முழுப் பெயர் : ...............................................................

**Address** : ...............................................................

...............................................................

...............................................................

Email: ...............................................................

Telephone No.: .............................................

Amount pledged: £.......... Amount enclosed : £...........

<u>Payment method</u>

<u>Payment method</u>

☐ Cheque -Please make payable to- **Saiva Munnetta Sangam (UK)**

☐ Electronic Funds Transfer (EFT) - Should you wish to make an electronic bank transfer, please email us at **smsukinfo@gmail.com** with your details, and we will send you the bank account details

☐ Standing order mandate. If you wish to pay in instalments, please ask for a standing order form from us.


☐ Cash

Introduced by: ........................................................................ Date:

giftaid it ☐

Boost your donation by 25p of Gift Aid for every £1 you donate. Gift Aid is reclaimed by the charity from the tax you pay for the current tax year. By ticking the box, I confirm that I want to Gift Aid my above donation and any donations I make in the future or have made in the past 4 years to Saiva Munnetta Sangam UK

Donor's signature - அன்பளிப்பவரின் கையொப்பம்:



## யோகர்சுவாமிகளின் மாதாந்த நினைவு தினம் - 2017

யோகர் சுவாமிகளின் மாதாந்த நினைவு தினம் .எமது ஆலயத்தில் காலை 10-12மணிவரை பின் வரும் தினங்களில் நடைபெறும் என்பதை அவரது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

05-03-2017 - ஞாயிறு காலை 10-12 மணிவரை

## பெரிய புராணச் சொற்பொழிவுகள்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் எமது சங்க ஆலயத்தில் மாலை 8.00 மணியளவில் இடம்பெறுகின்றது

| | | | |
|---|---|---|---|
| 03.02.2017 | வெள்ளிக்கிழமை | **கணநாத நாயனார்**<br>திருப்பணி அணைத்தவர்க்கு வினை விளங்க வேணடிய குறை எலாம் முடித்த திறம் | கலாநிதி விஸ்வலிங்கம் அனந்தசயனம் |
| 10.02.2017 | வெள்ளிக்கிழமை | **கூற்றுவ நாயனார்**<br>மலர்ப் பாதம் முடியாகப் பெற்று உலகம் எல்லாம் புரந்தார் புகழ் | திரு. த இரவீந்திரமோகன் |

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"


சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

**Saiva Munnetta Sangam (UK)**

***"Community Service Through Saiva (Hindu) Concern"***

Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel / Fax: 020 8514 4732 Fax: 01268 561805

**www.saivamunnettasangam.com** **smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**


அருள்மிகு சிதம்பரேஸ்வர ஆலயம்

கலசம் காலாண்டிதழ்

தோரணம் மாதாந்த மின்னிதழ்

நால்வர் தமிழ்ப் பாடசாலை

நால்வர் மூத்தோர் நியைம்

யோகா நிலையம்

.சைவ சமயப் பரீட்சைகள்

கலை வகுப்புகள்

நால்வர் கோட்டம்

கடல் தன்மயமாக இருந்துகொண்டு தன்னை வந்தடைகின்ற நீரையெல்லாம் தன்மயமாக்குதல்போன்று சிவன் தன்னையடைகிறவர்களையெல்லாம் சிவமயமாக்குகின்றான்

**நாளைய கனவை நனவாக்கும் நாற்பது**

The best preparation for tomorrow is doing our best today

See page 1,8.9.10

**வாருங்கள் நாமும் இணைந்து நாளைய கனவை நனவாக்குவோம்**

# ANNA DHANAM

En- Out Circle ach Pro- s - Sri Saiva Munnetta Sa _Ja '17





**Anna Dhanam provided for the orphan children . at This is to remember & respect the departed Souls from this world (Thenpulathar Ompal) during the auspicious days of Amavasai & Pournami (New moon & Full moon days dur- th month Jan .**





**Our aim is to serve at least 5,000 meals to hungry stomachs during 2017 ; that are in need of the necessi- lif**

**How many of part in this initiative dur- ing**



Our sincere thanks for the support received from our well-wishers for this invaluable service to fellow human beings who are in need of help by providing Anna Dhanam ( giv- foo for hungry stom- .

Our thanks go to KM Foundation for their in- sup- on the grou ……

Please contact us if you are interested in feeding the hun-

Special Thanks go to Mr Vaheesan family for invalua- sup- .

# ANNA DHANAM

En- Out Circle ach Pro- s - Sri SaivaMunnettaSanga – Jan'1 7

**Special Anna Dhanam provided for over 100 elders at Puthu- in Vanni dur- Janu- .**



After the war over 100 elders were displaced to Puthumurippu in vanni. They are living under the poverty line and are struggling to manage their day to day life. This activity was co- or- wit the Government Agen





Meals on Wheels in Van- ni……

These elders are in need of help.